சுருக்கம்

வாகனம் – செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதிய சீருந்து வாங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி–1) துறை

அரசாணை (நிலை) எண்: 175

நாள்: 23.06 .2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய, ஆனி – 9

படிக்கப்பட்டது:

மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித எண்.9883/திவ–1(2)/ 2011, நாள்: 31.10.2011.

------

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்கள் செங்கற்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் மருத்துவக்கல்லூரி தொடர்பான முதல்வரின் அனைத்து அலுவலகப் பணிகளுக்கும் மற்றும் மருத்துவக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், பிற அலுவலகங்களுக்கு சென்று வருவதற்கும் ஒரு வாகனம் மிக அத்தியாவசியமாக தேவைப்படுகிறது என்றும் மேலும் செங்கற்பட்டு மருத்துவக்கல்லூரி முதல்வருக்கு வழங்கப்பட்ட அம்பாசிடர் கார் 2008ம் ஆண்டு கழித்தொதுக்கம் செய்யப்பட்டுவிட்டது என்று மருத்துவக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளதை மருத்துவக்கல்வி இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

2. மேலும் செங்கற்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வரின் பயன்பாட்டிற்கு புதிய அம்பாசிடர் கார் வாங்குவதற்கு ரூ 4,43,412/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து நானூற்றி பன்னிரெண்டு மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும் மேலும் மாதமொன்றிற்கு 160 லிட்டர் எரிபொருள் வழங்குமாறும் மருத்துவக்கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மருத்துவ கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு மிக கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, செங்கற்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வரின் பயன்பாட்டிற்கு புதிய அம்பாசிடர் கார் வாங்குவதற்கு ரூ 4,43,412/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து நானூற்று பன்னிரெண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மேலும்

மாதமொன்றிற்கு 160 லிட்டர் அவ்வாகனத்திற்கென எரிபொருள் வழங்கவும் அரசு இதன்மூலம் ஆணையிடுகிறது.

4. மேலும் மேலே பத்தி 3–ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு வாகனத்தை வாங்கி வழங்கிட மருத்துவக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

5. மேற்காணும் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 05 – மருத்துவக் கல்வி
பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 105 – ஆங்கில முறை மருத்துவம் – I –
திட்டத்தில் சேராதது AE செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி
செங்கல்பட்டு 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்
(த.தொ.கு - 2210-05-105-AE 2112)

45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்
(த.தொ.கு - 2210-05-105-AE 4503)

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014–2015 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை, மேற்கொள்ள மருத்துவக்கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், 2014–2015–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்–II) துறைக்கு அனுப்பும்பொழுது இத்தொகையையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வரசாணை உள் / நிதித்துறையின் 10107/போ.IV/ 2014–1, நாள் 21.2.2014 மற்றும் அ.சா.எண்.27562/சுகாதாரம்–II/2014, நாள் 09.06.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.489 (நானூற்று எண்பத்தொன்பது) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக்கல்வி இயக்குநர், சென்னை–6.
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை–83.
இயக்குநர், தமிழ் நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத்துறை, சென்னை–32.
முதல்வர், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு.

மாநில கணக்காயர் , சென்னை–18.
மாநில கணக்காயர் அலுவலர், (தணிக்கை–2), சென்னை–18
மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம்.

**<u>நகல்:</u>**
மாண்புமிகு அமைச்சர் (சுகாதாரம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உள் (போ.வ–IV) துறை, சென்னை –9.
நிதி (சுகாதாரம்- II) / வ.செ பொது II துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–09.
இருப்புக்கோப்பு / சுத்த நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.